**செ. கு. எண்: 008** **நாள்: 12.01.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 12.1.2020</u>

கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணியாற்றி வந்த திரு. ஜான்சன் என்பவர் 30.12.2019 அன்று ஆர்.டி மலை அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் ஊரக உள்ளாட்சி தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது, நெஞ்சுவலி ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. முருகதாஸ் அவர்கள் 1.1.2020 அன்று வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. அறிவுடைநம்பி என்பவர் 3.1.2020 அன்று விளந்தை அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்கு எண்ணும் மைத்தில் பாதுகாப்புப் பணி முடிந்து வீட்டிற்கு செல்லும் போது மயக்கமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

ஊரக உள்ளாட்சி தேர்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்புப் பணியின் போது உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. ஜான்சன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. முருகதாஸ், திரு. அறிவுடைநம்பி ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக உள்ளாட்சி தேர்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போது பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தலைமைக் காவலர் திரு. ஜான்சன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. முருகதாஸ் மற்றும் திரு. அறிவுடைநம்பி ஆகிய மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**